# SOUTHERN REGION MINES AND MINERAL BASED WORKERS WELFARE ASSOCIATION

Reg. No. 3/95

Ittamozhi Road, Keeraikaranthattu, Tisaiyanvilai - 627 657

Date ..............................

நாள் : 21.08.2014

பெறுநர்

1. திரு.சமஸ்,
   தி இந்து
   பத்திரிக்கை நிருபர்

2. ஆசிரியர்
   தி இந்து
   தமிழ் நாளிதழ்

ஐயா,

20.08.2014 அன்று **“வணக்கம் வைகுண்டராஜன்”** என்ற தலைப்பில் தாங்கள் எழுதி இருக்கும் கட்டுரைக்கு எனது ஆட்சேபணையை கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட பக்கத்தில் ஒரு புகைப்படம் வெளியிட்டு உள்ளீர்கள். தயவு செய்து கீழ்கண்ட புகைப்படங்களையும் தாங்கள் வெளியிட்ட புகைப்படத்தையும் ஒப்பிட்டு பாருங்கள்.




# SOUTHERN REGION MINES AND MINERAL BASED WORKERS WELFARE ASSOCIATION

Reg. No. 3/95

Ittamozhi Road, Keeraikaranthattu, Tisaiyanvilai - 627 657


Date ..............................



இந்திய அரசு நிறுவனங்கள் செய்யும் மேற்கண்ட பணி பற்றி தாங்கள் வாய் திறக்கவில்லை. தாங்கள் குறிப்பிட்டுள்ள படத்தில் எங்கே குடியிருப்பு உள்ளது?


தயவு செய்து சுரங்க பணிகளின் படத்தில் சிலவற்றை கீழே பாருங்கள்.

# SOUTHERN REGION MINES AND MINERAL BASED WORKERS WELFARE ASSOCIATION

Reg. No. 3/95

Ittamozhi Road, Keeraikaranthattu, Tisaiyanvilai - 627 657

Date ..............................






# SOUTHERN REGION MINES AND MINERAL BASED WORKERS WELFARE ASSOCIATION

Reg. No. 3/95

Ittamozhi Road, Keeraikaranthattu, Tisaiyanvilai - 627 657

Date ..............................





மேற்கண்டவாறு நடைபெறும் சுரங்க பணிகள் பற்றியும் சுற்றுச்சூழல் பற்றியும் தாங்கள் வாய் திறக்காததற்கு மாதாமாதம் தாங்கள் பெறும் தொகை தான் காரணமா?

**SOUTHERN REGION MINES AND MINERAL BASED WORKERS WELFARE ASSOCIATION**

Reg. No. 3/95

Ittamozhi Road, Keeraikaranthattu, Tisaiyanvilai - 627 657

Date ..............................

உங்களையும் Times Now தொலைக்காட்சி நிருபர் சந்தியா என்பவரையும் ஆளுக்கு 50 லட்சம் கொடுத்து வி.வி.க்கு எதிராக எழுத எடுத்து விட்டேன் என தயாதேவதாஸ் என்பவர் ஒரு மாதமாகவே கூறி வருகிறார்.

சந்தியா என்பவர் தனது கணவருக்கு வி.வி. தொடங்கும் தொலைகாட்சியில் வேலை தரவில்லை என்றால் மீண்டும் வி.வி.க்கு எதிராக எழுதுவேன் என அன்பான மிரட்டல் கொடுத்து மீடியேட்டர்கள் மூலம் பேரம் பேசி வருகிறார். அந்த பேரம் படியவில்லை என்றால் இன்னும் ஒரு வாரத்தில் இந்தியா அழிகிறது என சந்தியா வாய் திறப்பார். ஏனென்றால் சந்தியாவிற்கு இந்தியா மீது அவ்வளவு பற்று.

தாங்கள் பெற்ற பணத்திற்கு இவ்வாறு பொய் செய்திகள் எழுதுவதை விட்டு விட்டு நியாயமாக எழுத ஆரம்பியுங்கள்.

இந்த கட்டுரையை பார்த்த பிறகு தாங்கள் சட்டிஸ்கர் பயணம் என எழுதியதும் இவ்வாறு கற்பனை நயத்தோடு உண்மையன்றி எழுதப்பட்டிருக்குமோ என்ற எண்ணம் தோன்றுகிறது. தாங்கள் ஏதோ மறைந்து ஒளிந்து இரவில் போனதாக கூறுகிறீர்கள். நீங்கள் சட்ட விரோத செயலுக்கு செல்வதாக இருந்தால் இரவில் தான் செல்ல வேண்டும். தங்கள் தலைப்பிற்கும் அந்த கட்டுரைக்கும் என்ன தொடர்பு?

வி.வி.மினரல் இணையத்தளத்தில் உள்ள செய்திகளை குறிப்பிட்டு உள்ளீர்கள். இந்து பத்திரிக்கை இணைய தளத்திலும் ஏராளமான விஷயங்கள் உள்ளன. 1940 முதல் 2014 வரை இந்து பத்திரிக்கை வளர்ந்தது இவ்வாறு தொழில் போட்டியாளர்களில் ஒரு தரப்பினரை கையில் எடுத்து அவர்களுக்கு சாதகமாக செய்தி வெளியிட்டு சட்ட விரோதமாக பணம் செய்து தான் என்பது தங்களது இந்த கட்டுரையை படித்த பிறகு தான் தெரிகிறது.

Date ..............................

இவ்வாறு சட்டவிரோதமாக பெறப்பட்ட பணத்தில் வளர்ந்த இந்து பத்திரிக்கையை அரசுடமை ஆக்கி அனைத்து பணியாளர்களையும் அரசு பணியாளர்கள் ஆக்கலாமே என சிலர் பேசுகிறார்கள். அந்த பேச்சில் நியாயம் இருப்பதாகத் தான் தங்களது இந்த செய்தியை பார்க்கும் போது தெரிகிறது.

“வணக்கம் வைகுண்டராஜன்” – சரியான தலைப்பு. தவறான செய்தி. தமிழ்நாட்டிலேயே கேபிட்டேசன் பீஸ் இல்லாமல் பொறியியல் கல்லூரியில் வி.வி. கல்லூரியில் மட்டுமே இடம் கிடைக்கிறது. எனவே அவருக்கு வணக்கம் சொல்வதில் தவறு இல்லை.

சுற்றுவட்டார கிராம மக்களுக்கு இலவச மருத்துவம் அவர்களால் தான் வழங்கப் படுகிறது. வணக்கம் சொல்லலாம்.

ஏழை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் இலவசமாக வழங்கப் படுகிறது. வணக்கம் சொல்லலாம்.

20 ஏக்கர் அரசு நிலத்திலும், 10 ஏக்கர் சொந்த நிலத்திலும், 100 ஏக்கர் தனி நபர்களின் நிலத்திலும் உரிய அனுமதியே இன்றி சுற்றுச்சூழல் அனுமதியின்றி இந்தியன் ரேர் எர்த் நிறுவனம் மெகா கொள்ளை நடத்துகிறது. கடந்த 10 வருடங்களாக உலகிலேயே அதிக மோனோசைட் உள்ள மணவாளக்குறிச்சியில் இருந்து தயாரிக்கப்படும் மோனசைட், கார்னட் என்ற பெயரில் திரு.தயாதேவதாஸ்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இது பற்றி நடவடிக்கை எடுக்க தாங்கள் எழுதவில்லை.

உயர்நீதிமன்ற உத்தரவு படி 39 லட்சம் டன் சட்டவிரோதமாக சுரங்க பணி செய்ததை கண்டுபிடித்து 14 லட்சம் டன்னை பறிமுதல் செய்து அரசு உத்தரவிட்டது. திரு.தயாதேவதாஸ் அதிகார பலத்தாலும், தங்களை போன்ற வதந்தி பரப்பும் பத்திரிக்கையாளர் உதவியாலும் இதுவரை நடவடிக்கை இன்றி

**SOUTHERN REGION MINES AND MINERAL BASED WORKERS WELFARE ASSOCIATION**
Reg. No. 3/95
Ittamozhi Road, Keeraikaranthattu, Tisaiyanvilai - 627 657

Date ..............................

தவிர்த்து வருகிறார். அரசு அதிகாரிகள் மற்றும் நீதிமன்றங்களின் கவனத்தை திசை திருப்ப ஓய்வு பெற்ற படித்த கிரிமினல் அதிகாரிகள் தீட்டிய திட்டத்தின் படி தாங்கள் காசுக்காக இவ்வாறு பொய் செய்திகளை வெளியிடுகிறீர்கள்.

தாங்கள் இரவிலும் போக வேண்டாம். மறைந்தும் போக வேண்டாம். பார்ப்பதை உண்மையாக எழுதுவேன் என்ற உறுதியோடு இருந்தால் அத்தனை கடற்கரை இடங்களையும் உங்கள் பார்வையோடும் உங்கள் உயர் அதிகாரிகளின் முன்னிலையிலும் வீடியோ செய்கிறோம். பார்ப்பதை தாங்கள் எழுத தயாரா?

கடற்கரை அருகிலேயே கடற்கரை கிராமங்களிலேயே கடற்கரை ஓரமாகவே 3 மாவட்டங்களிலும் உங்களை அழைத்து செல்கிறோம். உண்மையை பார்த்து தாங்கள் எழுத தயாரா?

அப்படி இல்லை என்றால் இது தயாதேவதாஸ் போன்றோர் போட்ட ரொட்டி துண்டுக்காக எழுதப்பட்டது என்பதை வெளியிட வேண்டிய கட்டாயத்தில் நாங்கள் இருக்கிறோம்.

தங்களுக்கு பணம் கொடுக்கும் நிலா நிறுவனம் எடை குறைந்த ஆக்டோபசை ஏற்றுமதி செய்கிறது. இரால் மீன் என்ற பெயரில் கடல் அட்டையையும் கடல் குதிரையையும் ஏற்றுமதி செய்கிறது.

கடல் ஆமை பிடிக்கப்படக் கூடாது. ஆனால் தினசரி எத்தனை கடல் ஆமைகள் பிடிக்கப்பட்டு வெட்டுப் படுகின்றன என்பது தங்களுக்கு தெரியுமா?

விஷவாயு தாக்கி 50-க்கும் மேற்பட்டவர்கள் நிலா சீ பூட் நிறுவனத்தில் பாதிக்கப்பட்டார்களே? அந்த தொழிலாளர்களுக்கு என்ன இழப்பீடு கொடுக்கப் பட்டது? அந்த இனத்தில் வாய்மூடி மௌனமாக இருக்க தங்கள் பத்திரிக்கை பெற்ற பணம் எவ்வளவு?

**SOUTHERN REGION MINES AND MINERAL BASED WORKERS WELFARE ASSOCIATION**

Reg. No. 3/95

Ittamozhi Road, Keeraikaranthattu, Tisaiyanvilai - 627 657

Date ............................

இந்த பொய் செய்தி பற்றி எந்த சட்டப்படி எந்த அதிகாரிக்கு அல்லது எந்த கவுன்சிலுக்கு நாங்கள் புகார் எழுத வேண்டும் என்ற விபரத்தை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நாங்கள் இது சம்பந்தமாக ஒரு புகார் எழுத விரும்புகிறோம்.

தயவு செய்து எங்களது இந்த ஆட்சேபணையை தங்கள் பத்திரிக்கையில் வெளியிடவும் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள

ஆர். பாலகிருஷ்ணன்